தமிழ்ச் சிட்டு

எதிர் பார்க்காதே! ஏமாற மாட்டாய்!

எதிர் பார்க் காதே!
　　ஏமாற மாட்டாய்!
புதிராய் இராதே!
　　பொத்தக மாய்இரு!
அதிரப் பே சாதே!
　　அமைவாய்ப் பேசு!
முதிர முதிர
　　முனிவை அடக்கு!

அன்புக்கு அன்புசெய்!
　　அறிவைப் புகழ்ந்துரை!
தென்பொடு நில்; நட!
　　தெளிவொடு பேசு; செய்!
வன்பொடு செயல்தவிர்!
　　வாய்மையே வெல்லும்!
துன்பினில் சோர்வுஏன்?
　　தோள்களை நிமிர்த்து!

கனிவொடு பேசு!
　　கல், இறக் கும்வரை!
தனிமையும் பழகு!
　　தவ உளம் வளம்தரும்!
இனிமையும் அளவுகாண்!
　　இருளிலும் விழித்திரு!
குனிதொழில் இழிதரும்!
　　கொள்கை நிலைத்திரு!

ஆசிரியர்: பெருஞ்சித்திரன்

ரல் : 22
சை : 8
விலை : உருபா : 1-50

தெரிந்து கொள்ளுங்கள்

○ பஞ்சாபில் 1951 முதல் இதுவரை 10 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

○ கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்காவில், நியூயார்க் நகரில் உலக நாடுகளின் பேரவையின் சிறப்பு உச்சி மாநாடு நடைபெற்றது. அக்கால் உலக நாடுகளின் தலைவர்கள் 14 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இம் மாநாடுகள் நடைபெற்ற பொழுது, உலக ஒன்றிய நாடுகள் (ஐ.நா) கட்டிடத்திற்கு வெளியே, இந்தியாவில் மாந்த உரிமைகள் மறுக்கப்படுவதாகக் கூறி அதற்குக் கண்டனம் தெரிவித்து ஏறத்தாழ 5000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

○ பிரிட்டனில் ஏப்ரல் முதல் இளவேனில் தொடங்கிவிடும். அப்பொழுது பகல்பொழுது அதிகரித்துக் கொண்டே வந்து சூலை மாதத்தில் (கோடையில்) உச்சநிலையை அடையும். அப்பொழுது அதிகாலை 3-30 மணிக்கே விடிந்துவிடும். இரவு 9 மணி வரை கதிரவன் வெளிச்சம் இருக்கும். இதனால் ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய 6 மாதங்களுக்கு எங்கும் விழாக்கள், வேடிக்கைகள், பொருள் காட்சிகள், கூட்டங்கள் ஆகியவை நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

இதற்கு நேர் எதிராக அக்டோபர் முதல் மார்ச்சு முடிய 6 மாதங்கள் மக்களைக் குளிரும் இருளும் வாட்டி வதைத்துவிடும். இம் மாதங்களில் பகல் பொழுது குறைந்து, இருள் நீண்டு கொண்டே இருக்கும். திசம்பர் மாதங்களில், கிறித்துமசு விழாவின் பொழுது மாலை 3.30 மணிக்கே இருட்டிவிடும்; காலை 8 மணிக்குத் தான் பொழுது விடியும்.

○ பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் வண்டிகள் வலப் பக்கமாகவே செல்லுகின்றன.

○ இன்றைய நிலையில் உலக நாடுகள் அனைத்திலும் ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ 1600 கப்பல்கள் (பல்வேறு பயன்களுக்காக) கட்டப் பெறுகின்றன.

○ இந்தியாவில் ஆண்டுக்கு உரு 7000 கோடி மதிப்புள்ள பஞ்சு விளைகிறது.

○ உலக மிகுதிறன் (சாதனை) நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் பட்டியலிட்டுக் கொடுக்கும் 'கின்னஸ்' வெளியீடு 1955 முதல் வெளிவந்து கொண்டுள்ளது. பதிவு செய்யப்பட்டு வெளிவரும் நூல் வெளியீடுகளுள் இதுதான் மிகுந்த விற்பனை உள்ளது. ஆண்டுதோறும் 6 கோடி படிகளுக்குமேல் அது விற்பனையாகிறது. அ'து உருசியம், இந்திமொழி உட்பட 36 மொழிகளில் வெளியிடப் பெறுகிறது.

○ இந்தியப்—படைத்துறை வரலாற்றிலேயே முதன் முதலாகக் கடந்த 93 மார்ச்சு மாதத்தில்தான் 23 பெண்கள் படைத்துறையில் பதவி ஏற்றனர்.

○ சென்னையிலிருந்த நேரு விளையாட்டுத் திடலைப் புதினமாக்கிப் புதுப்பிப்பதற்குத் தமிழக அரசு 41½ கோடி உருபா செலவழித்தது.

○ தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்வதில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிறிய தீப்பெட்டி அளவில்கூடத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வந்துள்ளன, கைக் கடிகாரங்களிலும் தொலைக்காட்சி அமைந்துள்ளது.

(தொடர்ச்சி அட்டை 3-அம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்கு நல்வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2025) சுறவம் (சன-பிப் 94) [இசை-8

அறிவியல் வளர்ச்சியெல்லாம் அழிவுக்கும் இழிவுக்குமே!

அறிவியல் என்பது மக்களின் நலத்துக்காகவும் மேம்பாட்டிற்காகவுமே என்று அதன் நுட்பங்களைப் பல்வேறு கோணங்களில் கண்டுபிடித்த அறிவியல் அறிஞர்கள்(விஞ்ஞானிகள்) கருதினர்.

ஆனால், அவ்வறிவியல் கண்டுபிடிப்புகள் பல்வேறு நாடுகளின் அனைத்ததிகார(சர்வாதிகார) ஆட்சியினரிடம் சிக்கி, அவர்களால் ஆளப்படுகின்ற மக்களை அழித்தொழிப்பதற்கும், தங்களின் பகை நாடுகளை வன் சண்டைகளால் கைப்பற்றப்படவும், அப் பகை நாட்டு மக்களைக் கொல்லவுமே பயன்படுத்தப் படுகின்றன. இவ்வகையில் கடுமையான போர்க்கருவிகளான அணுக்குண்டுகள், நீர்வளிக்குண்டுகள், இலக்கு நோக்கிச் செல்லும் ஏவுகணைகள், அண்டை அயலில் உள்ள பகை நாடுகளை வேவு பார்க்கும் உளவு ஊர்திகள் முதலியவற்றைப் பல்லாயிரக்கணக்காகச் செய்து வைத்துக்கொள்ளவும், தேவைபடும்போதெல்லாம் அந் நாடுகளின் மேல் குறி தவறாமல் எய்தி அந்நாடுகளை அழிக்கவுமே பயன்படுத்தப் பெறுகின்றன.

அதேபோல் அவ்வந் நாட்டு மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் உரிமை இயக்கங்கள், விடுதலைப் போராட்டக் குழுக்கள்—முதலியவற்றை அடக்கி ஒடுக்கவும் இவ்வறிவியல் முன்னேற்றக் கருவிகள் பயன்படுத்தப் பெறுகின்றன. இப்போர்க

கருவி வகையில் இப்பொழுது கண்டுபிடிக்கப் பட்டுள்ளவை ஏறத்தாழ ஆயிரக் கணக்கை எட்டலாம். சிறு சிறு கண்ணி வெடிகள், பல்வகைத் துமுக்கிகள், தானே எதிரியின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து அதை அழிக்கும் ஏவுகணைகள், மிக வேகம் கொண்ட மீவேக வானூர்திகளைச் சுட்டு வீழ்த்தும் தானியங்கிகள், மிகவும் ஆற்றல் வாய்ந்த தகரிப் படைகள் (டாங்கிகள்), கடலுக்குள்ளேயே சென்று பகைவரின் கப்பல்களைச் சுட்டு வீழ்த்தி விட்டு வரும் கடல் மூழ்கிப் போர்க் கப்பல்கள், நள்ளிரவிலும், கடுமையான பனிமூட்டம், அடைமழை இவையிருந்தாலும், கொஞ்சமும் தவறுமல் சென்று பகைவர்களை அழிக்கின்ற எரிவளிக் குண்டுகளைச் சொரியும் புதினமும் கடுவேகமும் ஆற்றலும் வாய்ந்த காணொலி (Supersonic) வானூர்திகள், சுட்டால் திருப்பிச் சுடும் வானூர்தித் தானியங்கு பொறிகள், முதலிய இன்னோரன்ன புதிய புதிய கண்டு பிடிப்புகள் எல்லாம் நடைமுறைக்கு வந்துள்ளன. இவற்றை ஈவு இரக்கமின்றிப் பயன்படுத்தும் நாடுகள் பேரளவில் உள்ளன; அனைத்ததிகாரிகளும் உளர். இவையெல்லாம் அறிவியலை மக்கள் அழிவுக்கும், உலக அழிவிற்கும் பயன்படுத்துவதற்கான எடுத்துக்காட்டுகளே என்று உலக நலம், மக்கள் நலம் கருதும் அறிவியல் அறிஞர்களும், நடுநிலைக் கல்வியாளர்களும் வருந்திக் கூறி வருகின்றனர்.

இனி, இவ்வழிவுக் கருவிகளைப் போலவே, அறிவியலைப் பயன்படுத்தி,மக்களின் மன மகிழ்வுக்கும் பொழுது போக்கிற்கும் உதவுகின்ற பலநூறு கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர் அறிவியலறிஞர்கள். அவை புகைப்படப் பிடிப்புக் கருவிகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்,கணினி(கம்யூட்டர்) வழி இயக்கப் படுகின்ற விளையாட்டுக் கருவிகள் முதலிய பல்வகைக் கருவிகளாகும்.

இவற்றைக் கொண்டு இயற்கையறிவு, உயிரியல் அறிவு, மருத்துவ அறிவு, வானியல், நிலவியல் அறிவு நிலைகள், கணக்கியல் அறிவு, காட்சியறிவு, முதலிய பல்வேறு அறிவுக் கூறுகளையும், பொதுமாந்தச் சிறப்பு நிலைகளையும், மக்களிடையே பரப்ப முடியும். ஆனால் மேற் கூறப் பெற்ற கருவிகளைக் கொண்டு, அவற்றைக் கையில் வைத்திருக்கும் அரசு என்ன செய்கிறது? வெறும் திரைப்படப் பாடல்களையும், விழா வேடிக்கைகளையும், மூட நம்பிக்கைகளையும், இழிவுகளையும் பரப்பிக் கொண்டும் விளம்பரப் படுத்திக் கொண்டுமே உள்ளது. இந்நிலை பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

இப்பொழுதுள்ள தில்லியரசும் சரி,மாநில அரசும் சரி,மக்கள் நலம் கருதுகின்ற அரசுகளாக இல்லை என்பது அவற்றின் நடவடிக்கைகளைக் கொண்டே அறியலாம். மக்கள் நலம் கருதுகின்ற அரசுகளாக இருக்குமானால், மேற்கூறப்பெற்ற ஆற்றல் வாய்ந்த அறிவியல் கருவிகளை வைத்து, அவர்களின் முன்னேற்றத்திற்கும் அறிவு மேம்பாட்டிற்கும் உரிய பல்வேறு உத்தி-

களைக் கையாண்டு, பல்வகையான ஒளி, ஒலி பரப்புகளைச் செய்யலாம். ஆனால், உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் அக் கருவிகளைப் பயன்படுத்தி மக்களை மூடர்களாக்குகின்றன; மக்களிடம் இழிவுணர்வுகளைத் தாராளமாகப் பரப்புகின்றன; அவர்களின் அறிவுணர்வுகளையும் அழிக்கின்றன; அவர்களைச் சிந்திக்க விடாமல் செய்கின்றன; இவற்றை இந்திய அரசு மட்டுந்தான் செய்கிறது என்று நினைக்க வேண்டாம். உலகில் உள்ள எல்லா வல்லரசு நாடுகளும் செய்துகொண்டுதாம் இருக்கின்றன;

'மக்களை மூடநம்பிக்கைகளிலும் இழிவுணர்வுகளிலும், மதச் சேற்றிலும் ஆழ்த்திச் சிந்திக்க விடாமல் செய்து விட்டால், அவர்களிடம் சிந்தனையாற்றல், உரிமையுணர்வு முதலியவை குறைந்து போய்த் தங்களைத் தட்டிக் கேட்கின்ற செயலாற்றல் அறவே அழிந்து விடும்' என்று அந்த முதலாளியப் பேரரசுகள் கருதுகின்றன. அந்த நிலையில் தாங்கள் தங்கள் நலனுக்கென்று என்ன தவறான ஆட்சி நடைமுறைகளைக் கையாண்டாலும், தங்களைப் பொது மக்கள் தட்டிக் கேட்க மாட்டார்கள் என்றும், அந்த நிலைக்கு அவர்கள் தன்னுணர்வும் உரிமை உணர்வும் பெற மாட்டார்கள் என்றுமே, அவர்களை அடக்கி யொடுக்குகின்ற முதலாளிய அரசுகள் கருதுகின்றன; எனவேதான் மக்களின் நல்லுணர்வுகளை இழிவுப் பாதையிலும் பொழுது போக்கு மூடநம்பிக்கை உணர்வுகளிலும் திசை திரும்புமாறு செய்கின்றன; இவற்றை மக்களிடையில் பரப்புகின்ற அறிவியல் கருவிகள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவை யாதலால், பொது மக்கள் தங்களை அறியாமல் தங்களை இழந்து கொள்வதற்கு அவை துணை போகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்;

குறிப்பாக இந்திய அரசு இந்நிலையில் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்தால், உண்மையான மக்கள் நலம் கருதுகின்ற அறிவியல் உணர்வுள்ள நன்மக்கள், அறிஞர்கள், இன முன்னேற்றத்திற்கு உழைக்கும் தலைவர்கள் ஆகியோர் மிகவும் மனம் வருந்த வேண்டியிருக்கும்; எடுத்துக் காட்டுக்காக அரசு கடைபிடிக்கும் சில நடைமுறைகளை இங்குக் காட்டுவோம்.

இந்திய அரசு கடந்த சில ஆண்டுகளாக, மிகப் பழமையான புராண இதிகாசக் கதைகளான இராமாயண, மகாபாரதக் கதைகளைத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பி வருகிறது; இப்பொழுதும் 'கிருஷ்ணா' என்னும் புராணக்கதையையும் அண்மைக் காலத்திலிருந்து ஒளிபரப்பி வருகிறது. இக்கதைகளில் பல மாயக் காட்சிகள் வருகின்றன. வெறும் கட்டுக் கதைகளான இவற்றில் வரும் மாயக் காட்சிகளுக்கும் மந்திர தந்திரச் செயல்களுக்கும், இவற்றைப் படமாக ஆக்கியவர்கள் அறிவியல் கருவிகளின் துணைக் கொண்டு, இக் காட்சிச் செயல்கள் உண்மையாகவே நடந்தவை போல மக்கள் மதிமயங்கும் வகையில் காட்டுவது பெரும் அறிவுக் கொலைக் கொடுமையாகும்; கடவுளின் பெயரால்,

மதத்தின் பெயரால், நடைபெறும் இம் மூட நம்பிக்கைக் காட்சி-களுக்கு அறிவியலைத் துணைக் கொள்வது எவ்வளவு பெரிய மக்கள் அழிவுக் கொள்கை என்பதை அரசில் உள்ளவர்கள் உணராமலா இருப்பார்கள்? உணர்ந்தேதான் இச் செயலை அவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இவை மக்களையும் அவர்களின் முன்னேற்றங்களையும் அறியாமையில் வீழ்த்தும், அவர்களின் வாழ்வியலைத் தாக்கும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்; இருப்பினும் அவர்கள் இதை ஏன் செய்து வருகிறார்கள் என்றால், அவர்களை இவர்கள் சிந்திக்க விடக் கூடாது, விழிப்புணர்வு பெற விடக் கூடாது என்பதுதான் அவர்களின் நோக்கம் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி, இவை போலவே இவர்கள் காட்டுகின்ற பொழுது போக்குக் கலை, கதை, காட்சி நிகழ்ச்சிகளுமாகும். அவற்றில், இளம் பெண்களை மிக அருவருப்பாக ஆடச் செய்தும், பாடச் செய்தும், அவர்களுடன் ஆடவர்கள் கட்டிப்புரளுமாறும், பாலியல் உணர்வுகளைத் தூண்டும் பல கழிகாமச் செயல்களில் ஈடுபடுமாறும் நடிக்க வைத்துப் படமெடுத்துக் காட்டுகிறார்கள்; இதைப் பார்ப்பனர்களின் மனம் மிகவும் தாழ்ந்த இழிவான உணர்வுகளால் சூழப் பெற்றுக் கீழ்மையடையும் என்பதில் ஐயமே இல்லை. இளைஞர்களே இதைப் பார்த்துப் பார்த்து ஒழுக்கக் கேடு-களில் ஈடுபடாமல் இருக்க இயலாது என்பதைப் பெரியவர்கள் உணர்ந்து மிகவும் உளத்துன்பம் கொள்கிறார்கள் |எனலாம்;

மொத்தமாகச் சொல்வதானால், திரைப்படத்துறைகள் நம் தமிழ்க் கலைஞர்கள் கற்ற கலைத்திறன்களை யெல்லாம், அறிவியல் நுட்பங்களையெல்லாம் திரைப்படங்களின் இக் கழிகாமக் கூத்தடிப்புக் காட்சிகளுக்காகவே பயன்படுத்தி, இக்கால இளை-ஞர்கள் இவற்றிலேயே ஈடுபட்டு, மனமும் அறிவும் அக்காட்சி-களிலேயே திளைக்கும் படி செய்கிறார்கள் எனில் இவர்களின் கலைத்திறமையை எப்படிப் பாராட்டுவது? இவர்களின் அத்துறை வளர்ச்சிமுழுவதும் இழிவுகளையும் தாழ்வுகளையும் வளர்த்தெடுப்-பதற்கே பயன்படுத்தப் பெறுவதெனில் எப்படி அவர்களைப் புகழ்ந்துரைப்பது? வெறும் பொருளீட்டும் முயற்சியிலே இவர்கள் அனைத்து கலை நுட்பங்களும் அறிவியல் ஆற்றல்களும் வீணே கழிவதை எண்ணி மனம் நொந்து நொடிந்து புழுங்குவதைத் தவிர, வேறு என்ன பயன்களை இவற்றில் காணமுடிகிறது? எண்ணிப் பார்க்க வேண்டும் இளைஞர்கள்.

அடுத்து, இவ்வரசு இவ்விளைஞர்களுக்காகச் செய்யும் விளை-யாட்டு வேடிக்கைகளில்தாம் எத்தனை அறிவியல் தொழில் திட்-டங்கள் ஊடுருவி நிற்கின்றன! ஆனால், அவை அனைத்தும் குறிப்-பிட்ட மிகச் சிலரின்-முதலாளிகள் சிலரின் வெற்று மனமகிழ்ச்சிக்-காகவே வீணடிக்கப் பெறுகின்றன என்பதைத் தவிர வேறு என்ன பயன் இந்நாட்டு ஏழைப் பொது மக்களுக்கு விளைந்து விட முடியும் என்பதை எவரேனும் கட்டிச் சொல்லமுடியுமா?

என்னென்ன விளையாட்டு வகைகள்! அவற்றிற்கு உதவும் அறிவியல் தொழில் நுட்பக் கருவிகள்தாம் எத்தனை எத்தனை? அவற்றிற்காக அரசு செலவிடும் பொருட்செல்வமும் மோழை முயற்சிகளும்தாம் எவ்வளவு? அவற்றில் ஈடுபடுத்தப் பெறும் இளைஞர் இளைஞைகள் தாம் எத்தனை ஆயிரம் பேர்! அவர்களின் மாந்த ஆற்றல் எவ்வளவு! அவர்களுக்காகச் செலவிடும் சம்பளப் பணங்களும், வெகுமதி வீணடிப்புகளும்தாம் எவ்வளவு! அவ் விளையாட்டு வேடிக்கைகளைக் கண்டு களிக்கும் வீணர்களின் மாந்த ஆற்றல்தான் எவ்வளவு! அப்பப்பா இவற்றை எண்ணிப் பார்க்கையில் நெஞ்சு நெக்குருகி, அறிவு அலமருண்டு, உயிர் ஊசலாடுகிறதே!

இவை அத்தனையும் நாட்டு முன்னேற்றத்தின் அடிப்படை-யில், நாட்டு ஒற்றுமை என்னும் பெயரால்; ஒருமைப்பாடு என்னும் கண்மூடி நோக்கத்திற்காகத்தான் என்று நாட்டை-யாளும் முதலாளியக் கோமாளிகள் கூறுவார்களானால் இவர்-களின் வாய்க்கொழுப்புத்தான் என்ன? மனத் தகிடு தத்தங்கள் தாம் எவ்வளவு? அறிவுச் செருக்குதான் என்ன? யாரே இவர்-களுக்கு அறிவுத் தெளிவை உண்டாக்க முடியும்? எண்ணிப் பாருங்கள்!

இப்பொழுது சொல்லுங்கள்; வானளாவப் போற்றிப் புகழும் இருபதாம் நூற்றுண்டின் அறிவியல் வளர்ச்சி என்பது, இவ்வுலக மக்களின் நலன்களுக்கும் முன்னேற்றத்திற்குமா பயன்படுத்தப் பெறுகிறது? இல்லை; இல்லை. இம் மக்களின் அழிவுக்கும் இழிவுக் குமே என்று முடிவு செய்வதில் என்ன பிழை இருக்க முடியும்? எண்ணிப் பார்த்து முடிவுசொல்லுங்கள்! ⊙

சிட்டே மொழிவாய்

—தமிழ்ப்பித்தன்.

சிட்டுக் குருவியே,
 சிட்டுக் குருவியே!
பட்டெனப் பறக்கும்
 பைந்தமிழ்க் குருவியே!
வெட்டிப் பார்ப்பனர்
 விரித்த வலையினில்
வீழ்ந்து கிடக்கும்
 வீரக் குருவியே!
தட்டி எழுப்பித்
 தமிழரை நிமிர்த்தி
தங்கத் தமிழ்த்தாய்
 தலைநொறுக்கிடவே
மொட்டுப் பிளந்த
 முல்லைவாய்ச் சிட்டே!
மொழிவாய் ஒருவழி
 முதலினம் வாழவே!

போர்க்குணமும் சாதி உணர்வுளும்!

— அதியமான் —

அசையும் உயிரினங்களுக்கு உயிர்வாழப் போர்க்குணம் மிக மிகத் தேவை. அப்போர்க் குணம் வளர்க்கப்படவேண்டியதாகும். ஏனென்றால் உயிரினங்களுக்கு ஏதங்கள் (ஆபத்துகள்) பல வழி-களில் பல வகையாக வந்து தாக்கும். அவற்றை எதிர்த்துப் போராடத் தெரியாவிட்டால் அல்லது முடியாவிட்டால் மாண்டு போக வேண்டியதுதான். வரும் ஏதங்களைக் கண்டு அஞ்சி விட்டால் கோழையாகி அடிமையாக நேரும். எனவே போராடும் திறம் வளர்க்கப்பட வேண்டும். அல்லது தானாகவே அதை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

ஊர்வன, பறப்பன, விலங்கினங்கள் ஆகியவை வாழும் முறைகளை ஆய்ந்தால் போராட்டக்குணம் எவ்வளவு முகாமை யானது என்பது புரியும். விலங்குகளில் அரிமா (சிங்கம்) புலி ஆகியவை போர்க்குணம் மிக்கவை. மற்றவை சற்றுக் குறைவான போர்க்குணத்தை உடையவை என்றாலும் அவை அக்குணத்தா-லேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அக்குணம் மட்டும் இல்லாதிருந்தால் எதிரிகளால் தாக்கப்பட்டுச் செத்து மடிந்து விடும். வலிமை மிகுந்த விலங்குகளைக் கண்டு அஞ்சும் விலங்கினங்-கள் ஒழிந்து போக நேரும்; அல்லது அடிமைகளாகவே வாழ்ந்து கடுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்து வாழும்.

பறவைகளில் கிளி போராட்டக் குணத்தில் சற்று குறை-வானது. இன ஒற்றுமை உடையதுதான். வலிமை மிகுந்த இனத்தோடு சண்டையிட முடியாததாகையால் மறைந்து பொந்துக்-குள் வாழுகிறது. இக்கிளியை மாந்தர்கள் பிடித்துக் கூட்டுக்குள் அடைத்துப் போட்டு வளர்க்கிறார்கள். அது காட்டில் தன் விருப்பப்படி பறந்து சென்று உரிமையோடு வாழ்ந்த மரபுரி-மையை, மாந்தர்களிடம் அகப்பட்டபின் இழந்து வாழ்கிறது. அதற்கு மாந்தன் எவ்வளவுதான் பழமும், சோறும் கொடுத்-தாலும் கூட்டைவிட்டு வெளியில் பறக்கவிடமாட்டான். சிறகொடிந்த கிளியேதான் அது. அது வானத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்குவதைக் காணலாம். தன் இன வளர்ச்சியைச் செய்யமுடியாதபடி இயற்கையான உணர்ச்சிகளையும் மறந்து அடிமை வாழ்வில் வாழ்ந்து மடிகிறது.

நாய் நல்ல போராட்டக் குணத்தை உடையது. ஆனாலுங்-கூட மாந்தர்களுக்கு அஃது அடிமைத் தொழில் செய்து வாழ்வ-தால் அதன் போராட்டக் குணம் தன் இனத்திற்குப் பயனற்றுப் போயிற்று. மாந்தனுக்கு நாய் அடிமைப் பணி செய்வதால் மாந்தன் அதனைப் போற்றுகிறான். நன்றியுள்ள விலங்கென்று அதனைப் புகழ்கின்றான். ஆனால் நாய் அதனுடைய இனத்திற்கு எவ்வகை நன்மையும் செய்யாது. மாறாகத் தன் இனத்தோடு சண்டையிட்டு ஒற்றுமையற்ற இழிந்த குணமுடையதாக இருக்-கிறது. எனவேதான் 'நாய் இருக்கிற இடத்தில் சண்டை'

என்ற பழமொழி பிறந்தது. அதனாலேயேதான் எந்த நாயை நன்றியுள்ளது எனப் புகழ்ந்தாரோ அதே நாயின் இரண்டகக் குணத்தை மாந்தர்களிடம் கண்டால், அவனை நாய்க்குணம் உடையவனென்று நாயின் குணத்தை எடுத்துக் காட்டி, இழிவாகப் பேசுகிறார்கள். மாந்தர்களுக்கு அகவை முதிர்ச்சியின் போது தன் மனைவி மக்களிடம் சணைட்யிடும் குணத்தை 'நாற்பது அகவைக்குமேல் நாய்க் குணம்' என மக்கள் கூறுவதைக் கேட்கிறோம்.

மாந்தன் போராட்டக் குணத்தை இயற்கையாகப் பெற்றவன்தான். சிறு குழந்தையாக இருக்கும்போதே இப் போராட்டக் குணத்தைக் காணலாம். தான் வைத்திருக்கும் பண்டத்தை அல்லது பொருளை மற்றோர் குழந்தை பிடுங்குமானால் போராடிப் பெறுவதைப் பார்க்கிறோம். எனவே இயற்கையாகப் போராட்டக் குணம் உடையவனாகவே மாந்தன் பிறக்கின்றான். ஆனால் குமுகாயத்தோடு வாழவரும்போது பலவகையான குமுகாயத்தின் கேடுகெட்ட அழுத்தத்தால் போராட்டக் குணத்தை மழுங்க அடித்துக் கொள்ளுகிறான், அல்லது நாயைப் போன்று தன்னினத்தோடேயே போராடித் தன்னையே அழிக்கிறான், அல்லது தன்னினத்தை அழித்துக் கொண்டிருக்கிறான்.

இதற்கு அடிப்படைக் கரணியம் சாதி உணர்வுகளே! பிறக்கும் போது சாதியைப் பற்றி அறியாத மாந்த இனம், அகவையின் வளர்ச்சியில் சாதியைப் பற்றித் தன் பெற்றோர் வழியோ அல்லது உறவினர் அல்லது குமுகாயத்தின் வழியாகவோ அறிந்து, சாதி உணர்வைப் பெற்று வளர்கிறான். சாதி உணர்வை உள்ளத்தில் இருத்திக் குருதியின் அணுக்களோடு ஓடவிடுகிறான், தன் இனத்தை மறந்து சாதிக் குழுக்களில் இணைந்து கொண்டு சாதியின் வேற்றுமையில் வேரூன்றி நின்று இயங்கக் கற்றுக் கொள்கிறான். இனத்தை புறந்தள்ளி விடுகிறான்; சாதிக் குழுக்களைக் காக்கும் உணர்வில் இனத்தை எதிர்க்கிறான்: நாய் போன்று தன்னினத்தோடு போராடி வீழ்த்திப் பிற இனத்திற்கு அடிமையாகி விடுகிறான். சாதி உணர்வுகளால் இனம் முழுவதும் அடிமைப் படுகிறதே என்ற தெளிவான மெய்ப்பொருளை உணராமல், ஒட்டு மொத்தமாகப் பிற இனத்தின் சொற் கேட்டு, அவனுக்கு நன்றியுடையவனாக இருக்க, சொந்த இனத்திற்குப் பகைவனாக இயங்கிக் கொண்டிருக்கிறான். இதனால் இனம் அடிமையாகிறது.

இந்தச் சாதி உணர்வுகளால் தமிழர்களுடைய போராட்டக் குணம் வேறு வழியில் சென்றுவிட்டது. தன் இனத்தாரோடு பகை உணர்வோடு வாழ்ந்து பலநூற்றாண்டுகளாகப் பிற இனத்திற்கு அடிமைப்பட்டுவிட்டான்; பெரும் பதவியில் இருப்போரும் தம் பெயரோடு சாதிப் பெயரை இணைத்துக் கொண்டு பெருமை படுவதைத் தமிழ்நாட்டில்தான் காண முடிகிறது. தெருக்களுக்கும் சாதிப் பெயர்களை இடுகிறான்; ஊர்ப் பெயர்களுக்குங்கூட சாதிப்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

கடல் நீரைத் தூய்மைப்படுத்த ஒரு கருவி!

கடல் நீரில் கன்னெய்(பெட்ரோலியம்)கழிவுப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கான தானியங்கிக் கருவி ஒன்றை, முதன் முதலில், சோவியத்துத் தூர கிழக்கு கப்பல் போக்குவரத்துக் குழுமத்தைச் சேர்ந்த எண்ணெய்க் கப்பல் ஒன்று நிறுவியுள்ளது. கடல் நீர் மாசடைவதைத் தடுப்பதற்கான அனைத்து நாட்டுச் சட்டத்தில், பிற நாடுகளுடன் சோவியத்தும் கையெழுத்திட்டுள்ளது; இதன்படி, இப்பொழுது ஒவ்வொரு சோவியத்துப் போக்குவரத்துக் கப்பலிலும் ஒரு மின்னணுவியல் கருவியும் பொருத்தப்படுகிறது; கடல் நீர் மாசடைவதைக் கண்காணிக்கும் கருவி இது.

நகோரத்கா துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களின் எண்ணிக்கை எப்பொழுதும் மிக அதிகம். இங்குள்ள மக்கள், மீன்பிடிப்பதில் ஆர்வமுள்ளவர்கள். இங்கு வருகை தந்த ஒரு நார்வே நாட்டுப் பெருமகர் ஒருவர் இங்குள்ள கடல் நீரை மிகத் தூய்மையாக வைத்திருக்கும் துறைமுக அதிகாரிகளைப் பெரிதும் பாராட்டினார்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெயர்கள் உண்டு. இந்தச் சாதி உணர்வுகளால் இன ஒற்றுமையை அழித்து வாழ்கிறார்கள். தமிழர்களுடைய போராட்டக் குணம் சாதி வேற்றுமையால் திக்குத் திரும்பி இன அழிவை உண்டு பண்ணிக் கொண்டிருப்பதை எண்ணிப் பாராமல் தமிழர்கள், இப்படியே இன்னும் இருப்பார்களானால் பலநூற்றாண்டுகளுக்குப் பிற இனத்திற்கு அடிமைகளாக இருக்கவே நேரும் என்பதை உணரவேண்டும். O

ஆசிரியர் வீடு மாற்றம்.

பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் இல்லம், மயிலார்ப்பூர், 12. துவாரகைக் குடியிருப்பிலிருந்து, சென்னை-17, தியாகராயநகர், தென்மேற்குப் போக் சாலை. எண் 27-க்கு மாற்றப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் இனி ஆசிரியர் இல்லத்திற்கு வருவதாயின் புதிய முகவரிக்கு வரும்படி கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

பிழை திருத்தம்!

தமிழ்ச்சிட்டு சென்ற இதழ் குரல் 22 இசை—7—இன் அட்டைப் பாடல் 2-ஆம் பத்தி 2ஆம் வரியில் 'ஊக்கம் கொள்ளும்'என்றிருப்பதை 'ஆக்கம் கொள்ளும்' என்று மாற்றிப் படிக்கவும். அச்சுப் பிழைக்கு வருந்துகிறோம்.

'வைட்டமின்' சாரங்களும் பயன்களும்.

உயிரினங்களின் உடல் வளர்ச்சிக்கும், தசை, எலும்பு, நரம்புகளின் செயல்களுக்கும், தேவையான ஆற்றல்களை ஊக்குவிப்பதற்கும், உடலின் திசுக்களை வலுப்படுத்தவும், திசுக்களை புதுப்பிக்கவும், உணவைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவும், உடல் நலத்திற்கும், வைட்டமின் சாரங்கள் தேவைப்படுகின்றன. இயற்கையான உணவில் கரிம வேதிப் பொருட்கள் காணப்படுகின்றன; இவையே வைட்டமின்கள் எனப்படும்;

வைட்டமின்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன; ஒன்று, கொழுப்பில் கரையும் வைட்டமின்கள்—அவை :வைட்டமின்- ஏ. டி. இ. கே; மற்றொன்று, தண்ணீரில் கரையக்கூடியவை; அவை வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ், வைட்டமின் 'சி' மற்றும் போலிக் அமலம்;

ஒவ்வொரு வைட்டமின் சாரமும் உடலின் என்னென்ன வேலைகளுக்கு உதவுகின்றன; அவை குறைந்தால் என்னென்ன நோய்கள் வரும், அவை என்னென்ன உணவுப் பொருள்களிலிருந்து கிடைக்கின்றன, என்பனவற்றை கீழே தரப்பட்ட, அட்டவணை மூலம் தெரிந்து கொண்டு—அவ்வகை உணவுப் பொருள்களை அன்றாடம் முடிந்தவரை உட்கொள்ளவேண்டும்; எல்லா வைட்டமின்களும் நாளும் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களில் தேவையான அளவில் இருப்பதால்—மருந்துக் கடைகளில் விற்கக்கூடிய எல்லா வைட்டமின்களையும் வாங்கிச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. ஒரு சில வைட்டமின்கள், உணவுப் பொருள்களில் அதிக அளவில் இல்லாமல் இருக்கலாம். அவற்றை மருத்துவர்களின் அறிவுரைகளின் பேரில் மட்டுமே கடைகளில் வாங்கிச் சாப்பிட வேண்டும்; வைட்டமின்களை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டாலும் கெடுதி ஏற்படும் என்பதை மறந்து விடக்கூடாது;

வைட்டமின் பெயர்	வைட்டமின்களால் நன்மை	வைட்டமின்கள் குறைந்தால் வரும் நோய்கள்	வைட்டமின்கள் அதிகம் உள்ள பொருள்கள்
வைட்டமின் 'ஏ' (ரெட்டினுல்)	தெளிவான கண்பார்வை, தசைகளில் உள்ள நுண்ணிய கண்ணறை(செல்)களின் வளர்ச்சி, தோல்	கண் நோய்கள்: மாலைக் குருடு, குறைபார்வை கருவிழி புண், வெள்ளை விழியில் சதை வளர்தல், கண் வறட்சி	மீன் எண்ணெ (காட்லிவர் ஆயில் மற்றும் சார்ட் லிவர் ஆயில்) கொழுப்புள்ள கடல் மீன்கள், ஈரல், வெண்ணெய்,

	வளர்ச்சி, நோய் நச்சுயிரிகளை எதிர்க்கும் ஆற்றல்;		முட்டை, பால், பச்சை நிறக்கீரைகள், கேரட், மாம்பழம்;
வைட்டமின் 'டி' (கால்சிபெரால்)	பற்கள் மற்றும் எலும்புகள் வலுப்பெறுகின்றன	எலும்புருக்கி நோய், (ரிக்கட்ஸ்) (ஆஸ்டியோமலேசியா) எலும்பு, பல் வளர்ச்சி மற்றும் குறைபாடுகள், இடுப்புவலி, கை, கால் உளைச்சல்;	கொழுப்புள்ள மீன்கள் மீன் எண்ணெ, ஈரல், முட்டை, பால், பால் பொருள்கள், வெண்ணெ, காலை சூரிய ஒளி;
வைட்டமின் 'இ' (டோகோ பெரால்)	நெஞ்சாங்குலை நோயைக் குறைக்க, இனச் சேர்க்கை, கண்ணறை(செல்)உருவாக்கம், உடல் தசைகளின் வளர்ச்சி, தோய்ந்த நோய்த் தசைகளின் வளர்ச்சி, அரத்தக் குழாய்கள் வலுப்பெறுதல், நோய் எதிர்ப்பு ஆற்றல்;	நெஞ்சாங்குலைத் தசைகளின் வலுக்குறைவு, மலட்டுத் தன்மை, ஆண்மைக் குறைவு, குறைப்(பிரசவம்)பேறு காலவலி, தூக்கத்தில் தசைகளின் துடிப்பு, தசைவலி, அரத்தக் குழாய்கள் வலுக் குறைதல்;	நிலத்திணைநெய் (தாவர நெய்) கோதுமை, எண்ணெ, முட்டையின் மஞ்சள் கரு, பச்சை நிறக் கீரைகள், காய்கறிகள், ஆட்டுச் சிறுநீரகம்(கிட்னி)
வைட்டமின் 'கே' (ஆண்டிஹெமரேஜ்)	அரத்தப் போக்கை நிறுத்த அல்லது அரத்தம் உறைய	அரத்தப் போக்கு, உடல் எடை குறைவு,(அனிமியா) அரத்த சோகை;	புதிய பச்சை நிறக் காய்கறிகள், கீரைகள் பழங்கள், தக்காளி, சோயா நெய்.
வைட்டமின் பி'1' (தயாமின்)	உடலில் உப்புச்சாரம் (கார்போ ஹைடிரேடு) கரைவதற்கும், பசி ஏற்படவும், உணவு	பெரி பெரி நோய், தாய்ப்பால் வற்றிப் போதல், வெர்னிக்ஸ் என்கெபலோபதி, கை, கால் உலைச்சல்	கைக்குத்தல் அரிசி. தவிடு, பருப்பு வகைகள் கள், கோதுமை, எள்-நல்லெண்ணெ, வேர்க்

	செரிக்கவும், மூளை நரம்புகள் வளர்ச்சி மற்றும் வலுவடைதல்	நரம்புத் தளர்ச்சி, கை, கால், விரல்கள் நடுக்கம், கண்பார்வை குறைவு, மூளை வளர்ச்சி குன்றிப் போதல், பசியின்மை.	கடலை, இறைச்சி, பால், முட்டை, ஈரல், ஈஸ்ட்டு;
வைட்டமின் பி'2' (ரிபோபிளேவின்)	கண்ணறை(செல்)கள், உடல்நலமுள்ள உயிர்ப்பு புரோட்டின், கொழுப்பு, கார்போஹைரேட் ஆகியவற்றை எரித்து ஆற்றலாக மாற்றி உடலில் சேர்ப்பதற்கு	வாய்ப்புண், உதடுகள் வெடிப்பு, நாக்கு வறட்சி; கண் சிவந்து எரிச்சல் ஏற்படுதல், மூக்கின் தோலிலிருந்து அதிகப் பிசிர் வருதல், ஆண், பெண் அடி உறுப்புகளில் அரிப்பு ஏற்படுதல்;	ஈரல், இறைச்சி, முட்டை, பால் கீரைகள், பருப்பு வகைகள் தவச(தானிய)ங்கள்;
வைட்டமின் 'நியாசின்'	புரோட்டீன், கொழுப்பு, கார்போஹைட்ரேட் ஆகியவற்றை எரித்து ஆற்றலாக மாற்ற	பெல்லகிரா, வயிற்றுபோக்கு, தோல் அரிப்பு, மூளை குழப்பம், மனநோய்;	ஈரல், இறைச்சி, முட்டை, மீன், ஈரால், பால், பருப்பு, வேர்க்கடலை, சோளம், கோதுமை;
வைட்டமின் பி'6' (பைரிடாக்சின்)	புரோட்டீன், கொழுப்பு, கார்போஹைட்ரேட் ஆகியவற்றின் படிநிலை இணைப்பிற்கும், மூளை நரம்பு வளர்ச்சிக்கும்	நாக்கு தடித்தல், உதடு வெடித்தல், வாய்ப்புண், கண் மங்குதல், வாந்தி,	ஈரல், இறைச்சி, மீன்; தானியங்கள் (பட்டாணிக்கடலை)
வைட்டமின் (போலிக் அமிலம்)	டிஆக்சி ரிபோ நியூக்லிக் அமிலம் உருவாக்கம் செய்ய	அரத்தசோகை, நாக்கு புண்ணாகித் தடித்தல், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு,	[ஈரல், முட்டை, கீரைகள்;

		மலட்டுதன்மை, கருச்சிதைவு, ஆண்மைக் குறைவு:	
வைட்டமின் பீ '12' (சயனகோபாலமைன்)	டிஆக்சி ரிபோநியூக்லிக் ஆசிட்(உருவாக்கம்) மற்றும் புரோட்டீன், கொழுப்பு,உப்புச்சாரம் (கார்போஹைட்ரேட்) இவற்றின் படிநிலை வளர்ச்சி இணைப்புக்கும், வேதியல்,மாற்றத்திற்கும்	அரத்தசோகை(அனீமியா)	ஈரல், இறைச்சி, முட்டை, பால், (அசைவ உணவுப் பொருட்களில் மட்டுமே பீ '12' கிடைக்கின்றன; நிலத் திணைகளில்(தாவரங்களில்)இவை இல்லை)
வைட்டமின் 'சி' (அஸ்கார்பிக்அமிலம்)	கொலாஜன் நுண் திசுக்களில் வேதியல் இணைப்பிற்கு, காயங்கள், புண் ஆறுதல், அரத்தப்போக்கு கட்டுப்படுதல், இரும்பு சாரம் உடலில் சேருவதற்குத் துணைபுரிதல், மலம்,சிறுநீர் நன்கு பிரிதல், அரத்தத்தை தூய்மையாக்குகிறது; மாரடைப்பைத் தடுக்கிறது;	பல் ஈறுவலி.(ஸ்கர்வி நோய்) பல் ஈறு வீங்குதல், அரத்தப்போக்கு.அரத்த சோகை, களைப்பு, வலுக் குறைவு நீர்கடுப்பு, மலச்சிக்கல்	நெல்லிக்காய், கொய்யாப்பழம், எலுமிச்சை, ஆரஞ்சு, தக்காளி, பருப்பு வகைகள், முட்டைக்கோஸ், முருங்கைகீரை முருங்கைக்காய், கத்திரிக்காய், முள்ளங்கி, உருளைக் கிழங்கு, காலிபிளவர், (பூக்கோசு) அமர்நாத் காய்,பச்சை நிறக் கீரை வகைகள், காய்கறிகள், முளை வந்த பட்டாணி.

தொகுப்பு: மருத்துவர்: அ. லியாகத்அலி

(நன்றி—கதைமலர் 12-6-93)

பெருஞ்சித்திரனுர் அழைக்கின்றுர்!

— பாவலர். இளஞ்சித்திரன் —

தம்பி, உன்னைத் தானடா நம்பித்
தமிழின் பெயரால் அழைக்கின்றேன்;
தமிழ்நிலம் எப்படி யாகில் உருப்படத்
தனியனென் ருலும் உழைக்கின்றேன்!
வெம்பிப் போய்விட லாமோ வீரம்?
மேன்மைத் தமிழினம் விழுந்திடவோ?
வெற்றித் திருநிலம் பகைவர் கால்களில்
விடிவில் லாமல் அழுந்திடவோ? (தம்பி)

இன்ரு, நேற்ரு, அடிமைப் பட்டோம்!
இம்மண் உரிமையை நாம்விட்டோம்!
எழுந்தால் என்ன? இடுப்பா ஒடிந்திடும்?
இந்நிலை யால்தான் நாம் கெட்டோம்!
நன்ரு யில்லை யேநம் வாழ்க்கை!
நானும் நீயும் நாயினமா?
நாலும் இழந்து விட்ட பிறவிகள்
நாமா உலகில்? வேறிலையா? (தம்பி)

எத்தனை ஆண்டுகள் இப்படி இருப்போம்?
இதற்கொரு கால முடிவில்லையா?
ஏன்நீ பிறந்தாய்? நான்தான் பிறந்தேன்?
இந்நிலத் திற்கே விடிவில்லையா?
நத்திடும் பிழைப்பொரு பிழைப்பா? தம்பி,
நாமதில் மகிழ்வ திழிவில்லையா?
நாடு மாறிகள் நம்மை ஆள்வது;
நமக்கவ மானப் பழியில்லையா? (தம்பி)

அரசை இழந்தாய்! நாட்டைப் பறித்தார்!
அட,ஓ! தெருவில் நிற்கின்ருய்!
ஆண்மை, வீரம் எங்கே போயின?
அவற்றைத் தெருவிலா விற்கின்ருய்!
முரசைத் தொலைத்தாய்! முடியை மறந்தாய்!
முழந்தா ளிட்டுக் கிடக்கின்ருய்!
மொய்ம்பும் உரனும் எங்கே போயின?
முதலைவிட் டெங்கு நடக்கின்ருய்? (தம்பி)

உன்தமிழ் உலகை ஆண்டது ஒருநாள்;
உலகிற் கேஅறம் சொன்னதடா!
ஊதா ரிப்பயல் போல்நீ இருந்தால்
ஊருல கென்ன சொல்லுமடா?
என்தமிழ்த் தம்பியே, என்னடா தயக்கம்?
ஏனுன் கண்களில் தூக்கமடா?

இப்படிப் போனுல் எப்படி விளங்கும்
இந்நிலம் என்பதென் ஏக்கமடா? (தம்பி)

எவனெவ னேஉன் நிலத்தில் இறங்கி
ஏரைப் பூட்டி ஓட்டுகின்ருன்!
ஏற்றம் இறைத்து நீரைப் பாய்ச்சி
ஏடா, திட்டம் தீட்டுகின்ருன்!
கவலைஎன் பதேஉனக் கில்லை யா?சொல்!
காலத் தைஏன் நீட்டுகின்ருய்?
கை,கால் வாங்க உடனே எழுக!
கண்களில் இரக்கமேன் காட்டுகின்ருய்? (தம்பி)

அசுரத் தனமெலாம் எங்கே தொலைத்தாய்?
ஆமை யைப்போல் அடங்குகின்ருய்!
அடங்கி உனக்கிங் காவ தென்ன?
அச்சத் தில்கை மடங்குகின்ருய்!
கொசுவத் தொளிந்த பெட்டையா என்ன?
குருளைப் புலிநீ இல்லையா?
கொல்லே றெனநீ எழமாட் டாயா?
கோழைத் தனமேன், சொல்லையா? (தம்பி)

இரவென் ருலும் பகலென் ருலும்
இம்மியும் சோரா திருக்கின்றேன்!
இனியஉன் முகத்தைப் பார்த்துத் தானடா
இந்தக் கொள்கையைச் சுமக்கின்றேன்!
வரவென் ருலும் செலவென் ருலும்
வாழ்க்கையை ஒன்ருய்க் கழிக்கின்றேன்!
வறுமை, பசி,பிணி, துன்பம் என்னை
வாட்டுவ தில்லை; பழிக்கின்றேன்! (தம்பி)

சிறைஎன் முடிவை மாற்றிய தில்லை!
சிந்தைத் தெளிவைச் சிதைத்ததில்லை!
செந்தமிழ் மண்ணின் விடுதலைக் குழைக்கும்
செம்மாப் பைநான் தொலைத்ததில்லை!
குறையில் லாநம் கொள்கைக் குன்னயே
குன்றென, மலைஎன நினைக்கின்றேன்!
கொண்டெடுத் ததைநீ வெல்லுதல் வேண்டும்!
கொடுமைகள் கண்டுளம் சினக்கின்றேன்! (தம்பி)

நாளைய தமிழகம் தம்பி, உன்னை
நம்பித் தானடா இருக்கிறது!
நாயகன் உன்றன் தலைமையின் கீழ்தான்
நாளைய விடியல் கிடக்கிறது!
வேளை வந்ததுன் தலைமை தானடா
வேண்டும்! எழுக காளையே!
விடுதலைக் கனியைக் கொய்வோம் வா! வா!
விரும்பிக் கொடுஉன் தோளையே! (தம்பி) ○

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

22. கானா—(**GHANA**—குடியரசு)

நிலப்பரப்பு : 23,8,305 ச. அ. மா.
மக்.தொ : 12.2,10 000
மக்.தொ.பெ : 3.1%
மக்.வா.எ. : ஆண்: 47, பெண்: 50(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 30%
தலைநகர் : அக்ரா
மொழி : ஆங்கிலம்,50மலைவாழ் மக்கள் மொழிகள்.
நாணயம் : சிடி—100 பிஸ்ஸிவா.

23. டோகோ—(**TOGO**)—குடியரசு

நிலப்பரப்பு : 5,6,785 ச. அ. மா
மக்.தொ : 2 8,90,000
மக்.தொ.பெ : 2. 7%
மக்.வா.எ. : ஆண்: 44, பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 10%
தலைநகர் : லோம்
மொழி : பிரெஞ்சு, மலைவாழ் மக்கள் மொழிகள்.
நாணயம் : C.F.A—பிராங்க் = 100 சென்டிம்கள்.

24. பெனின்—(**BENIN**)—குடியரசு

நிலப்பரப்பு : 1,12,622 ச. அ. மா.
மக்.தொ : 38,30,000
மக்.தொ.பெ : 3.0%
மக்.வா.எ : ஆண்: 44, பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 20%
தலைநகர் : போர்டோ நோவோ
மொழி : பிரெஞ்சு, கிளைமொழி.
நாணயம் : CFA பிராங்க் = 100சென்டிம்கள்

25. சாவோ டோம், பிரின்சிப்பி—(**SAOTOME and PRINCIPIE**)—குடியரசு

நிலப்பரப்பு : 964ச. அ. மா.
மக்.தொ : 10,2,000
மக்.தொ.பெ : 3. 4%
மக்.வா.எ : விளக்கம் இல்லை.
எழுத்தறிவு : 50%
தலைநகர் : சாவோ—டோம்.
மொழி : போர்ச்சுக்கீசியம்
நாணயம் : டோப்ரா — 100சென்டிம்கள்

26. நிகிரியா—(NIGERIA)—குடியரசு

நிலப்பரப்பு	:	9 2,37,68 ச:அ:மா
மக்:தொ:	:	8,2 3, 90,000
மக்:தொ:பெ	:	3.2%
மக்.வா.எ	:	ஆண்: 46, பெண்: 49(ஆண்டுகள்
எழுத்தறிவு	:	25%
தலைநகர்	:	லாகோஸ்:
மொழி	:	ஆங்கிலம், ஆசா, யோருபா, இல்போ
நாணயம்	:	நெய்ரா — 100 கோபோ,

27. கேமரான்—(CAMERON)—குடியரசு

நிலப்பரப்பு	:	4,75,442 ச:அ:மா
மக்.தொ	:	90,60,000
மக்:தொ:பெ	:	2.3%
மக்:வா:எ	:	ஆண்: 44, பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு	:	34%
தலைநகர்	:	யாயோன்டி
மொழி	:	ஆங்கிலம், பிரெஞ்சு, பாண்டு, சுதானிக்
நாணயம்	:	CFA பிராங்க் —100 சென்டிம்கள்,

28. நடு ஆப்பிரிக்க குடியாட்சி—(CENTRAL AFRICAN REPUBLIC—குடியரசு

நிலப்பரப்பு	:	622,984 ச:அ:மா
மக்.தொ	:	2 5, 20,000
மக்:தொ:பெ	:	2.7%
மக்:வா:எ	:	44 ஆண்டுகள்
எழுத்தறிவு	:	20%
தலைநகர்	:	பன்கூய்
மொழி	:	பிரெஞ்சு, கிளைமொழிகள்
நாணயம்	:	CFA பிராங்க் — 100 சென்டிம்கள்:

29. நடுக் கோட்டு கினியா—(EQUATORIAL GUINEA)—குடியரசு

நிலப்பரப்பு	:	2,8,051 ச:அ:மா
மக்:தொ	:	3,98,000
மக:தொ:பெ	:	2.3%
மக்:வா:எ	:	ஆண்: 44, பெண்: 48(ஆண்டுகள்)
எழுத்தறிவு	:	50%
தலைநகர்	:	மலாபோ:
மொழி	:	ஸ்பானிஷ், பேங்க், ஆங்கிலம்
நாணயம்	:	சக்குயிலி—100சென்டிம்கள்

(தொடரும்)

O 'ஸ்டாலின்' என்னும் சொல்லுக்கு 'இரும்பு மாந்தன்' என்று பொருளாம்.

O தமிழ்நாட்டில் ஏறத்தாழ 36,000 தொடக்கப் பள்ளிகளும், 4000 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

O ஒரு பப்பாளிப் பழத்தில் உள்ள உணவுச் சாரங்கள் நான்கு அரத்திப்(ஆப்பிள்)பழங்களில் உள்ளதாம்.

O உலகில் உள்ளநீர் அளவில் 3விழுக்காட்டுக்கும்குறைவாகத் தான் குடிநீர் உள்ளது. மீதி அனைத்துப் பகுதியும் உப்பு நீர்தான்.

O இக்கால் உலக மக்கள் தொகை 500 கோடி. இதில் 100 கோடி பேர் நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

O இந்தியாவில் மொத்தம் 40,077 தொலைவரி அலுவலகங்கள் செயல்படுகின்றன.

O நாட்டில் தற்பொழுது (90 91) 50.75 இலக்கம் தொலைபேசி இணைப்புகள் உள்ளன. மேலும் இணைப்புக் கோரி 19.61 இலக்கம் வேண்டுகைகள் காத்திருக்கின்றன.

O சமசுக்கிருதச் சொல்லில் 'ரிஷி' என்று குறிக்கப்படுவதைத் தமிழில் முனிவர், துறவி என்று மொழிபெயர்ப்பது தவறு. 'ரிஷி' என்றால் முனிவரோ துறவியோ அல்லர். வழிபாட்டுப் பாடல்களை இயற்றுபவரையே 'ரிஷி' என்று சமசுக்கிருதத்தில் கூறுவர். ஆரிய 'ரிஷி'க்கு மனைவி மக்கள் உண்டு; இன்ப துன்பங்கள் உண்டு; விளைநிலங்களும் ஆடுமாடு மந்தைகளும் உண்டு.

O பழைய பைபிளில் கூறப்பெற்றுள்ள ஈடன் தோட்டம் (ஈடன் காடு) துருக்கியில் யூபிரடீஸ், டைக்ரீஸ் ஆகிய இரண்டு ஆறுகள் தோன்றுகின்ற காட்டுப் பகுதியாகும். இங்குதான் வாழ்நாள் முழுவதும் நிலத்தில் பாடுபட்டு உழைத்துப் பயிர் செய்யும்படி ஆதாம் என்னும் முதல் படைப்பு மாந்தன் (பைபிள் கதையின்படி) இறைவனால் சாவிக்கப் பட்டான்.

O திருப்பெரும்புதூரை 'இராசீவ்புரம்' என்று பெயரிடக் கோரும் முயற்சியையும், இப்பொழுது அவருக்கு நினைவு மண்டபத்தைக் கோயில் நிலத்தில் அமைக்கவிருக்கும் திட்டத்தையும், இராமநுசர் பிறந்த புண்ணிய நிலமான திருப்பெரும்புதூரை இராசீவ் இறந்த இடம் என்று அடையாளம் காட்டுவதையும் அவரின் நினைவு மண்டபம் அமையவிருக்கும் இடத்தின் உரிமையாளராகிய ஆதிகேசவப் பெருமாள் கோவிலின் ஜீயர் வரதராஜ எதிராஜப் பெருமாள் கடும் மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று தெரிய வருகிறது.

O 1967 மார்ச்சு முதல் நாளில் தி.மு.க. முதன் முதல் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. 6-3-97—இல் அறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பையேற்றார். அன்றே சட்டமன்றக் கட்டிடத்தில் இருந்த 'சத்ய மேவ ஜெயதே' என்றிருந்த வாசகத்தை மாற்றி 'வாய்மையே வெல்லும்' என்று மாற்றியெழுதச் செய்தார்.

பிறகு 18-7-67—ஆம் நாள், 'சென்னை ராஜ்யம்' என்றிருந்த மாநிலப் பெயரை 'தமிழ்நாடு' என்று மாற்றக்கோரும் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

அடுத்து, 23-1-68—ஆம் பக்கல், சட்டப்பேரவையும், அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு அரசு அலுவலகங்கள் அனைத்திலும் அலுவலக மொழியாகவும், அனைத்துக் கல்லூரிகளிலும், அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்று மொழியாகவும் தமிழைக் கொண்டுவரும் தீர்மானத்தை நிறைவேற்றி அதை அந்த ஆண்டிலேயே நடைமுறைக்கும் கொண்டு வந்தார்.

O நம்மூளையின் எடை, நம் உடலெடையில் 2விழுக்காடு ஆகும்.

வள்ளுவர் வாய்மொழி.

- ❖ முக மலர்ச்சியுடன் ஒருவன் இனிய சொற்களைக் கூறுவது அக மலர்ச்சியுடன் ஈவதைவிடச் சிறந்தது.
- ❖ உதவியின் பெருமை அதை யாருக்குச் செய்கின்றோம் என்பதைப் பொறுத்தது.
- ❖ நல்லது செய்வதற்கே பயன்படும் என்றாலும் நேர்மை இல்லாமல் வரும் வருவாயை தவிர்த்து விடுக.
- ❖ நல்ல செயல்களைச் செய்வதற்கு ஒழுக்கமே கடைப்பிடிக்கத் தக்கது. தீயொழுக்கம் என்றுமே துன்பத்தைத்தான் தரும்.
- ❖ பிறரிடம் குற்றம் காண்கிறவன், தன்னிடமுள்ள குற்றத்தைக் காண்பானாகில், உலகில் தீமைகளே நிகழா.
- ❖ பொதுமை நலம் கருதுபவனுக்குக் கேடுகளே வந்தாலும் தன்னை விற்றாகிலும் அக் கேடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ உலகில் புகழைத் தவிர அழியாமல் நிற்கும் பொருள் வேறு எதுவுமில்லை.
- ❖ அம்பு நேராக இருப்பினும் கொடிய செயலைச் செய்கிறது. வீணை வளைந்திருப்பினும் இனிய இசையை தருகிறது. அவை போல் தோற்றத்தாலன்றி ஒருவருடைய செயலாலேயே பெருமையை அறிய முடியும்.
- ❖ திருட்டுத்தனமாகப் பொருள் சேர்ப்பது பெருகுவது போலவே அழிந்து விடும்.
- ❖ சிறந்தவர் ஒருவர்க்கு இருக்கும் அனைத்துப் பெருமைகளும் பெருமைகளாகக் கருதப்பட மாட்டா. அவர் பொய் சொல்லாமல் இருப்பதுதான் அனைத்துக்கும் பெருமை தருவது.
- ❖ செல்வம் நிலையில்லாதது. அதைப் பெற்றால் நிலையான செயல்களைச் செய்துவிட வேண்டும்.
- ❖ காமத்தாலும் கோபத்தாலும் அறியாமையாலும்தாம் துன்பங்கள் வளருகின்றன, இவை மூன்று உணர்வுகளையும் விட்டுவிடுபவனுக்குத் துன்பம் வருவதில்லை.
- ❖ செல்வம் உள்ளவர் முன், அஃது இல்லாதவன் எவ்வாறு அடக்கவொடுக்கமாக நின்று, அவன் தரும் பொருளுதவியைப் பெற்றுக் கொள்கிறானோ, அப்படியே அறிஞர் முன் நின்று கல்வியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
- ❖ சிறந்த அறிவில்லாதவனின் ஆடம்பரத் தோற்றம் அழகிய பொம்மையை அழகுபடுத்தியது போலாகும்.
- ❖ ஆராய்ந்த கல்வியில்லாமல் இருப்பவர் அடங்கிய வாயுடையவராக இருக்க மாட்டார்.
- ❖ மனம் போனவாறெல்லாம் தீமைகளை செய்வதைத் தடுத்து நின்று நல்லவற்றுள் ஈடுபடுத்துவதுதான் அறிவுடைமை ஆகும்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)